# கொரோனா வைரஸ் (Coronavirus (COVID-19)) நோயறிவுச் சோதனை

கொரோனா வைரஸ் (Coronavirus (COVID-19)) -ஐப் பற்றி உங்களுக்குக் கேள்விகள் ஏதும் இருந்தால், 1800 675 398-இல் 24 மணி நேர 'கொரோனா வைரஸ் (Coronavirus) அவசர உதவி இணைப்'பினை அழையுங்கள்.

கொரோனா வைரஸ் (Coronavirus) நோயறிவுச் சோதனையை மேற்கொள்ள நீங்கள் எங்கே செல்லவேண்டும் என்று தெரிந்துகொள்ள விரும்பினால், 1800 675 398-இல் 24 மணி நேர 'கொரோனா வைரஸ் (Coronavirus) அவசர உதவி இணைப்'பினை அழையுங்கள், அல்லது https://www.dhhs.vic.gov.au/getting-tested-coronavirus-covid-19 எனும் வலைத்தளப் பக்கத்திற்குச் செல்லுங்கள்.

மொழிபெயர்த்துரைப்பாளர் ஒருவர் உங்களுக்குத் தேவைப்பட்டால், முதலில் 131 450-ஐ அழைத்து 'கொரோனா வைரஸ் (Coronavirus) அவசர உதவி இணைப்பு' வேண்டுமெனக் கேளுங்கள் அல்லது உங்களுக்காக வலைத்தளத்தில் பார்க்குமாறு கேளுங்கள்.

மொழிபெயர்க்கப்பட்ட மேலதிக மூலவளங்களை https://www.coronavirus.vic.gov.au/translations எனும் வலைத்தளப் பக்கத்தில் நீங்கள் காணலாம்.

## சர்வதேச மாணவ-மாணவியர், அடைக்கலம் நாடிக்கொண்டிருப்போர் அல்லது வெளிநாடுகளில் இருந்து வந்திருப்போர் உள்ளடங்க, விக்டோரிய மாநிலத்தில் உள்ள அனைவருக்கும் கொரோனா வைரஸ் (Coronavirus) நோயறிவுச் சோதனை இலவசமாகும்.

கொரோனா வைரஸ் (Coronavirus) நோயறிவுச் சோதனை ஒவ்வொருவருக்கும் இலவசம். வெளிநாடுகளில் இருந்து வந்திருப்பவர்கள், சர்வதேச மாணவ-மாணவியர், புலம்பெயர்ந்தத் தொழிலாளர்கள் மற்றும் அடைக்கலம் நாடிக்கொண்டிருப்போர் போன்ற மெடிக்கேர் (Medicare) அட்டை இல்லாதவர்கள் இதில் உள்ளடங்குவர்.

உங்களுக்கு நோயறிகுறிகள் இருந்தால், பின் வரும் இடங்கள் ஏதொன்றிலும் நீங்கள் இலவச சோதனை ஒன்றைப் பெறலாம்:

- விக்டோரிய மாநில மருத்துவமனை ஒன்றிலுள்ள 'கொரோனா வைரஸ் (Coronavirus)' தீவிர சுவாச நோய் மதிப்பீட்டுச் சிகிச்சையகம்' (Acute Respiratory Assessment Clinic)



VICTORIA State Government | Health and Human Services

- ஒரு ‘சமூக சுகாதார மைய தீவிர சுவாச நோய் மதிப்பீட்டுச் சிகிச்சையகம்’ (Community Health Centre Respiratory Assessment Clinic)
- அங்காடி ஒன்றில் இருக்கும் ‘வாகன நுழைவுச் சிகிச்சையகம்’ (‘drive-through clinic’)
- கிராமப் பகுதிகளில் உள்ள, எப்போதும் நேரடியாகச் செல்லக்கூடிய ஒரு சிகிச்சையகம் (walk-through clinic).

## கொரோனா வைரஸ் (Coronavirus) நோயறிவுச் சோதனையை யார் மேற்கொள்ளவேண்டும்?

பின் வரும் அறிகுறிகளில் ஏதும் உங்களுக்கிருந்தால், நீங்கள் கொரோனா வைரஸ் நோயறிவுச் சோதனையை மேற்கொள்ளவேண்டும்

- சுரம்
- குளிர் போன்ற உணர்வு
- இருமல்
- தொண்டை வலி
- மூச்சுத் திணறல்
- மூக்குக் கசிவு
- நுகரும் திறன் இழப்பு

உங்களுக்குள்ள நோயறிகுறிகள் மிதமானவையாகவே இருந்தாலும் நீங்கள் சோதனையை மேற்கொள்ளவேண்டும்.

## நீங்கள் சோதனையை மேற்கொள்ளும்போது என்ன நடக்கும்?

நீங்கள் சோதனையை மேற்கொள்ளும்போது உங்களுடைய அடையாள ஆவணம் ஒன்றையும், தொடர்பு விபரங்களையும் உங்களிடம் கேட்பார்கள். உங்களிடம் மெடிக்கேர் (Medicare) அட்டை இல்லாவிட்டால், அடையாள ஆவணம் ஒன்றை கொண்டு வரவும், உதாரணமாக, சாரதி/ஓட்டுனர் அனுமதி, கடவுச்சீட்டு, போக்குவரத்துத் தள்ளுபடி அட்டை அல்லது மாணவ-மாணவி அடையாள அட்டை ஆகியவற்றில் ஏதாவது ஒன்று இருக்கலாம்.உங்களுடைய விசா நிலவரம் என்ன என்பது, சோதனையை உங்களுக்கு அளிக்கும் சிகிச்சையகத்திற்குத் தெரியவேண்டிய அவசியமில்லை.

செவிலி, மருத்துவர் அல்லது சுகாதாரத் தொழிலாளர் ஒருவரால் கொரோனா வைரஸ் நோயறிவுச் சோதனை செய்யப்படும்.உங்களுடைய தொண்டை மற்றும் மூக்கின் பின்புறத்திலிருந்து ஈரக் கசிவைத் தொட்டு எடுப்பார்கள். இந்தச் சோதனைக்கு ஏறத்தாழ ஒரு நிமிட நேரமாகும்.

## கொரோனா வைரஸ் நோயறிவுச் சோதனையை மேற்கொண்ட பிறகு நான் என்னைத் தனிமைப்படுத்திக்கொள்ள வேண்டுமா?

உங்களுக்கு நோயறிகுறிகள் இருந்தால், உங்களுடைய சோதனை முடிவு வரும் வரை நீங்கள் உங்களைத் தனிமைப்படுத்திக்கொள்ள வேண்டும் என்று சோதனையை

மேற்கொள்ளும்போது மருத்துவரோ அல்லது சுகாதாரத் தொழிலாளரோ உங்களுக்குச் சொல்லுவார். உங்களுடைய சோதனைக்குப் பிறகு நீங்கள் வீட்டிற்குச் சென்று, நீங்கள் வீட்டிலேயே இருக்கவேண்டும் உங்களுடைய சோதனை முடிவை நீங்கள் தெரிந்துகொள்ளும் வரை, என்பது இதன் அர்த்தம்.

உங்களுடைய சோதனை முடிவிலிருந்து, உங்களுக்குக் கொரோனா வைரஸ் இருக்கிறதா, இல்லையா என்பதை, அச்சோதனையை மேற்கொண்ட சிகிச்சையகமோ அல்லது மருத்துவரோ உங்களை அழைத்துத் தெரிவிப்பர்.

## சோதனை முடிவுகள் கிடைக்க எவ்வளவு காலமாகும்?

சோதனைக்குப் பிறகு முடிவுகளைப் பெறப் பொதுவாக 1 – 3 நாட்கள் ஆகும்.நிறைய மக்கள் சோதனைக்கு உள்ளாக்கப்பட்டால், உங்களுடைய சோதனை முடிவுகள் வர 5 நாட்கள் வரை ஆகலாம்.

உங்களுடைய முடிவுகளைப் பற்றியக் கேள்விகள் உங்களுக்கிருந்தால், நீங்கள் சோதனையை மேற்கொண்ட சிகிச்சையகம் அல்லது மருத்துவமனையுடன் தொடர்புகொள்ளுங்கள்.

அங்காடி ஒன்றில் இருக்கும் 'வாகன-நுழைவுச் சிகிச்சையக'த்தில் நீங்கள் சோதனையை மேற்கொண்டு, முடிவுகளுக்காக 5 நாட்களுக்கு மேல் காத்துக்கொண்டிருந்தால், தயவு செய்து 1800 675 398-இல் '24 மணி நேர கொரோனா வைரஸ் (Coronavirus) அவசர இணைப்'பினை அழையுங்கள். உங்களுடைய சோதனை முடிவுகளைப் பெற எமது அணியினர் உங்களுக்கு உதவுவர். அங்காடி ஒன்றில் இருக்கும் 'வாகன-நுழைவுச் சிகிச்சையக'ங்களினால் சோதனை முடிவுகளைப் பெறுவதில் உங்களுக்கு உதவ இயலாது. ஆகவே உங்களுடைய சோதனை முடிவுகளுக்காக தயவு செய்து அவர்களுடன் தொடர்புகொள்ளாதீர்கள்.

சோதனை முடிவில் உங்களுக்கு நோய் இல்லை என்று தெரியவந்தாலும், அது உங்களுக்குத் தெரிவிக்கப்படும். உங்களுக்கு நோய் இருக்கிறது என்று சோதனை முடிவில் தெரியவந்தால், Department of Health and Human Services - இலிருந்து ஒருவர் உங்களுடன் தொடர்புகொண்டு நீங்கள் என்ன செய்யவேண்டும் என்று உங்களுக்குச் சொல்வார்.

இந்த வெளியீட்டினை நீங்கள் அடையக்கூடிய வடிவில் பெற Emergency Management Communications <em.comms@dhhs.vic.gov.au> -இற்கு மின்னஞ்சல் செய்யுங்கள்.

Authorised and published by the Victorian Government, 1 Treasury Place, Melbourne.

© State of Victoria, Australia, Department of Health and Human Services May 2020.

ISBN/ISSN 978-1-76069-423-4 (online/print)

Available at Translated resources - coronavirus disease (COVID-19) <https://www.dhhs.vic.gov.au/translated-resources-coronavirus-disease-covid-19>